සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

තෙවන වාර පරීක්ෂණය
**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026**
Third Term Test

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: **13** | විෂයය / பாடம் / Subject: **வணிகக்கல்வி Businss Studies** | පත්‍රය / வினாத்தாள் / Paper: **II** | පැය / மணித்தியாலம் / Hours: **3** |

அறிவுறுத்தல்:
ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினக்களையேனும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

**1)** கபில குமார சேனாரத்ன அவர்கள் விவசாய ஏற்றுமதி திணைக்களத்தில் நீண்ட காலம் சேவையாற்றிய பின்னர் ஓய்வு பெற்ற திறமையான ஓர் அதிகாரி ஆவார். அவர் தனது ஓய்வு வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றும் நோக்கில், கித்துல் கருப்பட்டி, கித்துல் பாணி மற்றும் அதனுடன் தொடர்புடைய இனிப்பு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் சந்தைப்படுத்தும் ஒரு சிறு வணிக முயற்சியை ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார்.

**i.** (அ) மேலே நிகழ்வில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக நிறுவனத்தை கீழே தரப்பட்டுள்ள நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்துக.

(அ) உற்பத்தியின் தன்மை அடிப்படையில் (ஆ) உடமை அடிப்படையில்
(இ) நோக்கத்தின் அடிப்படையில் (ஈ) பருமன் அடிப்படையில் (02 புள்ளிகள்)

(ஆ) மேற்படி வணிகத்தில் காணப்படக்கூடிய விசேட பண்புகள் நான்கை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**ii.** (அ) மேற்படி வணிகத்தின் உள்ளீட்டு வெளியீட்டு செயன்முறையை காட்டும் வரிப்படம் ஒன்றை வரைக. (02 புள்ளிகள்)

(ஆ) பிரதேச அடிப்படையிலான கைத்தொழில் அபிவிருத்தியானது, ஒரு நாட்டின் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது என்பதை நான்கு காரணங்களின் மூலம் விளக்குக. (02 புள்ளிகள்)

**iii.** சூழல் நேய அணுகுமுறையில் மேற்படி வணிகத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன, என்பதை நான்கு காரணங்களின் அடிப்படையில் விளக்குக. (04 புள்ளிகள்)

**iv.** மத்திய கிழக்கு பிராந்திய நாடுகளில் நிலவி வரும் யுத்த நிலைமையின் காரணமாக உள்நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயு என்பவற்றின் விலைகள் உயர்ந்துள்ளன. மேலும், அவற்றுக்கான வழங்கலும் குறைவடைந்துள்ளது.

(அ) இத்தகைய சூழ்நிலையில், வாடிக்கையாளர்களுக்கான சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் வகையில் ஒரு வணிக நிறுவனம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்கான ஒழுக்கக் கோவை ஒன்றை தயாரிக்கவும். (02 புள்ளிகள்)

**v.** ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி சீராக இடம்பெறுவதற்கு அரசு மற்றும் வணிகங்களுக்கிடையில் பரஸ்பர உறவு பேணப்படுவது மிகவும் முக்கியமானது.

(அ) மேற்படி கூற்றை சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வணிகங்கள் பங்களிக்கும் முறைகள் நான்கை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2)

தித்வா சூறாவளியின் போது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக இலங்கையின் மத்திய மாகாணத்தில் உள்ள நெற் பயிர்ச்செய்கை மற்றும் மரக்கறி பயிர்ச்செய்கை இடம்பெறும் விவசாய நிலங்களின் பெரும்பகுதி அழிவுற்றது. அப்பகுதிகளில் வாழும் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை வழமைப்போல் தொடர முடியாத அளவிற்கு பெருந்தெருக்கள், புகையிரத பாதைகள், பாலங்கள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் சேதமடைந்தன.

**i.** (அ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு மேலதிகமாக விவசாய மக்கள் எதிர்நோக்கும் வேறு பிரச்சினைகள் நான்கைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) அனர்த்த காலங்களில் குறித்த பகுதிகளில் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையை மீட்டெடுப்பதற்காக தலையீடு செய்யக்கூடிய அரச நிறுவனங்களின் பெயர்கள் நான்கை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**ii.** உமாலி மற்றும் சுமல்கா ஆகிய இருவரும் தொழில் நிபுணத்துவம்மிக்க சட்டத்தரணிகள் ஆவர். அவர்கள் இருவரும் இணைந்து தங்களது சட்டத்தரணி சேவைகளை ஒரு பங்குடமை வணிக அமைப்பாக நடாத்துவதற்கு விரும்புகின்றனர்.

(அ) மேலே தரப்பட்டுள்ள சம்பவத்தின் அடிப்படையில் உமாலி மற்றும் சுமல்கா ஆகிய இருவரும் ஆரம்பிப்பதற்கு இருக்கும் வணிக நடவடிக்கைகளுக்கு பங்குடமை வணிகம் மிகவும் பொருத்தமான வணிக அமைப்பு முறையாக காணப்படுமா? விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) பங்குடமை வணிக நடவடிக்கைகளை சீராக நடாத்திச் செல்வதற்காக பங்குடமை ஒப்பந்தமொன்றில் சேர்க்கப்பட வேண்டிய நான்கு விடயங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

**iii.** இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட புதிய நிறுவனங்கள் மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் செயற்படத் தொடங்கின.

(அ) இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட புதிய நிறுவனங்கள் 04 தருக. (02 புள்ளிகள்)

(ஆ) அரச கூட்டுத்தாபனங்கள்; சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் என பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அவ்வாறான வேறு இரண்டு பெயர்களைக் குறிப்பிடுக. மேலும் ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வோர் உதாரணம் வீதம் எழுதுக. (02 புள்ளிகள்)

**iv.** ஜீவக, சிறுவயதிலிருந்தே தனது தந்தையின் முகமூடி மற்றும் பொம்மைகள் செதுக்கும் வணிகத்தில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்து வந்தான். சிற்பக்கலை மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த அவன், அதில் தனக்குள்ள உள்ளார்ந்த திறமைகளையும் வெளிக்கொணர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டான். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பல்வேறு ஆய்வுகளில் ஈடுபட்ட அவன், முகமூடி தொழில் தொடர்பாக காணப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் புத்தகங்களையும் வாசித்தான். தந்தையின் மறைவிற்குப் பிறகு அவ்வணிகத்தின் உரிமையாளரான அவன், இணையத்தின் மூலம் வெளிநாட்டு வாடிக்கையாளர்களைக் கண்டறிந்து, குறுகிய காலத்திலேயே தனது வணிகத்தை அதிக இலாபம் ஈட்டித் தரும் நிலைக்கு மேம்படுத்தினார்.

(அ) மேற்படி சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஜீவகவை ஒரு முயற்சியாளராக ஏற்றுக்கொள்ள முடியுமா? காரணம் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) ஜீவகவிடம் காணப்படும் முயற்சியாண்மைத் திறன்கள் நான்கு எழுதுக. (02 புள்ளிகள்)

**v.** “தேசிய பேரிடர்களை எதிர்கொண்ட பிறகு மீண்டும் மீண்டும் எழுந்து நிற்கும் திறன் கொண்ட சமூகத்தை உருவாக்குவதற்கு, சமூகத் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவது மிகவும் அவசியம்.” இக்கருத்துடன் நீங்கள் உடன்படுகிறீர்களா?

சமூகத் தொழில் முயற்சியாண்மையை (Social Entrepreneurship) வரையறுத்து, உமது வடைக்கான காரணத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**3)** திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த சமையல்காரரான ஹரிந்தி என்பவர் ‘இரத்தின தீபம்’ ஹோட்டலில் தலைமை சமையல்காரராகப் பணிபுரிந்தவராவார். அவர் தனது தொழிலிலிருந்து விலகிய பின்னர் வெள்ளவத்தை பகுதியில் குறைந்தளவு மூலதனத்துடன் தனக்கே உரித்தான வணிகமொன்றை ஆரம்பித்தார்.
மேலும் அவர் இரவு 10 மணிக்கு மேல் ஒரு சிறிய லொறி வண்டியைப் பயன்படுத்தி, அந்த உணவகத்தை ஒரு தெருவோர நடமாடும் உணவகமாகவும் நடாத்தி வருகிறார்.

**i.** (அ) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை ஆரம்பிக்கும் போதும், நடாத்திச்செல்லும் போதும் கருத்தில் கொள்ள வேண்டிய நான்கு விடயங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) இத்தகைய சிறிய நடுத்தரளவ வணிகங்கள் பல, ஆரம்பிக்கப்பட்டு சில நாட்களுக்குள்ளேயே மூடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களின் தோல்வியில் செல்வாக்கு செலுத்தக்கூடிய நான்கு காரணங்களைப் பட்டியலிடுக. (02 புள்ளிகள்)

**ii.** இன்றைய இளைஞர்களின் மத்தியில் இரவு நேர நடமாடும் வியாபார நிலையங்கள் மிகவும் பிரபல்யம் வாய்ந்து காணப்படுவதால், மேலும் இரண்டு லொறிகளை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள தீர்மானித்தார்.

(அ) குத்தகை நிறுவனம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ஆ) வணிகர் ஒருவருக்கு குத்தகை நிறுவனமொன்றினால் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு நன்மைகளை எழுதுக. (02 புள்ளிகள்)

**iii.** (அ) வைப்புகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் கடன்களை வழங்கல் தவிர்ந்த, வணிக வங்கிகளால் வணிகர்களுக்கு வழங்கப்படும் வேறு நான்கு சேவைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) தன்னியக்க வங்கிச் சேவைகளால் வங்கிகள் பெற்றுக்கொள்ளும் நான்கு நன்மைகளை எழுதுக. (02 புள்ளிகள்)

**iv.** (அ) மேற்படி சம்பவத்தில், அவர் தனது சிறிய லொறி வண்டிக்கு விரிவான பூரண காப்புறுதி ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்ள தீர்மானித்தார் எனின் அத்தகைய காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் நிச்சயமாக உள்ளடக்கப்படும் நான்கு இடர்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) காப்புறுதி செய்ய முடியாத இடர்களுக்கு நான்கு உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

**v.** “தகவல் தொடர்பாடல்” மற்றும் “வணிகத் தகவல் தொடர்பாடல்” என்பன இரண்டு தொடர்புடைய கருத்துகள் ஆகும்.

(அ) அவற்றை சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) சமூக நடவடிக்கைகளுக்கு தகவல்தொடர்பாடல் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை இரண்டு காரணிகளின் துணையுடன் விளக்குக.. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**4)** இலங்கையில் தெருப் போக்குவரத்தில் சர்வதேச தர நியமங்களின் தேவை முக்கியமானதாக கருதப்படுகிறது.

i. (அ) இலங்கையில் சிறந்த போக்குவரத்து முறைமையொன்றை பேணுவதற்கு, அப்போக்குவரத்து முறைமையில் காணப்பட வேண்டிய நான்கு பண்புகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தி நிறுவனமொன்றிற்கு வினைத்திறனான இருப்பு கட்டுப்பாட்டை பேணுவது மிகவும் முக்கியமானதாக காணப்படுகிறது. அவ்வாறு வினைத்திறனான இருப்பு கட்டுப்பாட்டை பேணுவதன் நான்கு நன்மைகளை எழுதுக. குறிப்பிடுக (02 புள்ளிகள்)

ii. (அ) களஞ்சிய சாலை ஒன்றின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு பல்வேறு உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறு பயன்படுத்தப்படும் நான்கு உபகரணங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உள்நாட்டு வியாபாரத்திற்கும் வெளிநாட்டு வியாபாரத்திற்கும் இடையே உள்ள இரண்டு வேறுபாடுகளைக் எழுதுக (02 புள்ளிகள்)

iii. (அ) தீர்வையற்ற வியாபார நிலையங்கள் (Duty Free Shops) என்பதனை சுருக்கமாக விளக்கி, அங்கு பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய இரண்டு தரப்பினரின் பெயர்களை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஒரு ஏற்றுமதியாளருக்கு நாணய கடிதம் முக்கியத்துவம் பெறுவதற்கான நான்கு காரணங்களைக் கூறுக. (02 புள்ளிகள்)

iv. (அ) இலங்கையில் தற்காலத்தில் சிறப்பு சந்தைகள் (ளூரிநசஅயசமநவள) மிகவும் பிரபல்யம் வாய்ந்து வருகின்ற போதிலும், பல பகுதிகளில் மரபு ரீதியான சில்லறை வியாபார நிலையங்கள் இன்னும் பரவலாக காணப்படுகின்றன. இதற்கான நான்கு காரணங்களைக் கூறுக. (02 புள்ளிகள்)

(ஆ) தெற்காசிய வலய நாடுகளின் ஒத்துழைப்பிற்கான சங்கம் (SARC) தனது ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நான்கு துறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

v. (அ) இலத்திரனியல் வர்த்தகத்தின் நான்கு வரையறைகளை குறிப்பிடுக . (02 புள்ளிகள்)

(ஆ) இலத்திரனியல் வியாபாரம் பல்வேறு தரப்பினரிடையே இடம்பெறுகிறது. நுகர்வோர் தொடர்புறும் இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறக்கூடிய நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**5)** கிருபா ஆடைத் கைத்தொழிலில் சுமார் 18 வருட கால அனுபவம் பெற்றவர். அவர் இலங்கையிலும் அதேபோன்று வெளிநாடுகளிலும் உள்ள ஆடை நிறுவனங்களில் பணியாற்றிய ஒரு அறிவான மற்றும் திறமையான ஒரு நபராவார். கிருபா தற்போது “கிரு அப்பரல்ஸ்” (Giru Apparels) என்ற பெயரில் தனது சொந்த ஆடை உற்பத்தி நிறுவனத்தை ஆரம்பித்து நடாத்தி வருகிறார். அவர் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துகிறார். மேலும் நிறுவனத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பயிற்சி பெற்ற ஊழியர்களையும் நியமித்துள்ளார்.

இலக்குகள் அடையப்படும் வரை தனது பணியில் மிகுந்த ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் தன்மையும் அத்துடன் எந்தவொரு பிரச்சனையையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு தீர்க்கும் தன்னம்பிக்கையும் அவரிடம் காணப்பட்டன. வணிகம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, அவர் தனக்கு கீழ் மட்டத்தில் பணிபுரிபவர்களின் கருத்துக்களையும் கருத்தில் கொள்வதுண்டு. ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது அவரிடம் காணப்படும் சிறந்த பண்புகளில் ஒன்றாகும். இதன் காரணமாக ஊழியர்கள் நிறுவனத்தின் மீது உயர்ந்த நம்பிக்கையையும் கொண்டுள்ளனர்.

இதுவரை காலமும் அனைத்து முகாமைத்துவக் கருமங்களையும் அவர் ஒருவரே மேற்கொண்டிருந்தாலும், நிறுவனம் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வருகின்றமையால், திறமையும் அனுபவமும் கொண்ட ஒரு செயற்பாட்டு முகாமையாளரையும், ஒரு நிதி முகாமையாளரையும், மேலும் இரண்டு மேற்பார்வையாளர்களையும் புதிதாக நியமித்துள்ளார்.

i. (அ) மேற்படி ஆடை தொழிற்சாலை நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வருவதற்கான காரணங்கள் 04 தருக (02 புள்ளிகள்)

(ஆ) கிருபா பின்பற்றும் தலைமைத்துவ பாணியை குறிப்பிட்டு, உமது விடைக்கான காரணத்தை தெளிவுபடுத்துக (02 புள்ளிகள்)

**ii.** (அ) ஒரு வெற்றிகரமான தலைவருக்கு இருக்க வேண்டிய தலைமைத்துவ பண்புகளில் கிருபா கொண்டிருக்கும் இரண்டு பண்புகளை குறிப்பிடுக (02 புள்ளிகள்)

(ஆ) கிருபாவினால் புதிதாகப் இணைத்துக்கொள்ளப்பட்ட செயற்பாட்டு முகாமையாளர் மற்றும் நிதி முகாமையாளர் என்போர் எந்த முகாமைத்துவ மட்டத்திற்கு உரியவர்கள் ஆவர்? அம் முகாமைத்துவ மட்டத்தில் காணப்படும் மூன்று கருமங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**iii.** (அ) ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக கிருபா பயன்படுத்தக்கூடிய இரண்டு நிதி சார் மற்றும் இரண்டு நிதி சாரா ஊக்குவிப்பு முறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பல்வேறு முறைகளை பயன்படுத்தி நிறுவனத்தின் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கான காரணங்கள் நான்கு குறிப்பிடுக (02 புள்ளிகள்)

**iv.** (அ) மேற்படி ஆடை தொழிற்சாலையின் தள அமைப்பானது செயன்முறை தள அமைப்பாகும். செயன்முறை தள அமைப்பின் அனுகூலங்கள் இரண்டையும் பிரதிகூலங்கள் இரண்டையும் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) இந் நிறுவனத்தின் மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக தனி ஒரு திணைக்களம் காணப்படுகிறது. கொள்வனவு செயன்முறையின் படிமுறைகளை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**v.** 'கிருபா வணிகத்தின்' உற்பத்தியான ஆடைகளின் தரத்தை மிக உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்காக, பின்வரும் தரக் கட்டுப்பாட்டு நுட்பங்கள் பின்பற்றப்படுகின்றன. அவற்றை சுருக்கமாக விளக்குக

(அ) தர வட்டங்கள் (ஆ) தர உறுதி

(இ) தரநியமங்கள் (ஈ) புள்ளிவிபர ரீதியான செயன்முறைக் கட்டுப்பாடு (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**6)**

**i.** ஒரு சரக்குத் தூள் உற்பத்தி நிறுவனத்தின் இருப்புக்கள் தொடர்பான சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| அதிகபட்ச பொருள் நுகர்வு: | நாளொன்றுக்கு 400 அலகுகள் |
| குறைந்தபட்ச பொருள் நுகர்வு: | நாளொன்றுக்கு 200 அலகுகள் |
| இழிவு மறுக்கட்டளைக் காலம்: | 10 நாட்கள் |
| உச்ச மறுக்கட்டளைக் காலம்: | 14 நாட்கள் |
| மறுக்கட்டளைத் தொகை: | 3600 அளவுகள் |

பின்வருவனவற்றைக் கணிக்க

(அ) மறு கட்டளை மட்டம் (ஆ) உச்ச இருப்பு மட்டம்

(இ) இழிவு இருப்பு மட்டம் (ஈ) பாதுகாப்பு கையிருப்பு (04 புள்ளிகள்)

**ii.** வ/ப மல்டி கலர் (தனியார்) கம்பனி இலங்கையின் முன்னணி வர்ணப்பூச்சு உற்பத்தி நிறுவனமாகும். இந்நிறுவனம் வருடாந்தம் நாட்டிலுள்ள பல அரச வைத்தியசாலைகளைத் தேர்ந்தெடுத்து இலவசமாக வர்ணம் பூசும் சேவையை வழங்குகிறது. மேலும், தனது ஊழியர்களின் உடல்நலப் பாதுகாப்பிலும் அதிக கவனம் செலுத்துகிறது. அத்துடன் வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் அனைத்து தரப்பினர்களுடனும் சிறந்த பயனுள்ள உறவுகளை உருவாக்கியுள்ளது. அத்துடன் தமது வாடிக்கையாளர்களுக்கு தரமான பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்கிறது. பொய்யான அல்லது ஏமாற்றும் விளம்பரங்களில் ஈடுபடுவதில்லை. வாடிக்கையாளர்களிடமும் அதேபோல் ஊழியர்களிடமும் மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்கின்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் அக்கறை செலுத்துகிறது. நாடு முழுவதும் விரிவான விநியோக வலையமைப்பையும் கொண்டுள்ளது.

மேற்படி நிறுவனம் பின்பற்றும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவைக் குறிப்பிட்டு விளக்குக.

**iii.** (அ) பொதியிடல் என்றால் எனக் கூறி, பொதியிடலின் மூன்று நிலைகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பொதியிடலை திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய நான்கு அம்சங்களை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**iv.** "வணிக நிறுவனங்கள் பல்வேறு மேம்படுத்தல் உத்திகளைப் பயன்படுத்துகின்றன."

(அ) நிறுவனமொன்றுக்கு மேம்படுத்தல் முக்கியம் பெறும் 04 சந்தர்ப்பங்களை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சுருக்கமாக விளக்குக:

1. நிலைப்படுத்தல் 2. உணர்வு (02 புள்ளிகள்)

**v.** (அ) வெளிநாட்டில் சில காலம் பணியாற்றி வந்த பெஞ்சமின், தான் சேமித்து வைத்த பணத்தில் ஒரு பகுதியை சாதாரண பங்குகளில் முதலீடு செய்ய தீர்மானித்தார்.

மேற்படி அவரது தீர்மானத்தின் அனுகூலங்கள் இரண்டையும் பிரதிகூலங்கள் இரண்டையும் எழுதுக.

(02 புள்ளிகள்)

(ஆ) ஒரு வணிக நிறுவனம் தனது நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது கவனிக்க வேண்டிய நான்கு அம்சங்களை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**7)**

**i.** வ/ப தேனு உற்பத்திகள் (தனியார்) கம்பனியின் 2026-03-31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

| **விபரம்** | தொகை 000’ | தொகை 000’ |
|---|---|---|
| விற்பனை | | 40 000 |
| ஆரம்ப இருப்பு | 7 000 | |
| கொள்வனவு | 16 000 | |
| | 23 000 | |
| இறுதி இருப்பு | (5 000) | |
| விற்பனைக் கிரயம் | | (18 000) |
| மொத்த இலாபம் | | 22 000 |
| விநியோகச் செலவு | 2 000 | |
| நிர்வாகச் செலவு | 5 000 | |
| ஏனைய செலவு | 1 000 | |
| நிதிச் செலவு | 2 000 | 10 000 |
| வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | | 12 000 |
| வருமான வரி | | (1 600) |
| வரிக்கு பின்னர் தேறிய இலாபம் | | 10 400 |
| | | |

(அ) மேலே தரப்பட்டுள்ள நிதிக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் நிதி விகிதங்களை கணக்கிடுக.

1. இருப்பு சுழற்சி விகிதம்
2. மொத்த இலாப விகிதம் (02 புள்ளிகள்)

(ஆ) இந் நிறுவனத்தின் முன்னைய ஆண்டு வட்டிக் காப்பு விகிதம் 4 தடவைகளாக காணப்பட்டது. நடைமுறை ஆண்டின் வட்டிக்காப்பு வீதத்தை முன்னைய ஆண்டின் வட்டிக்காப்பு வீதத்துடன் ஒப்பிட்டு அதன் மூலம் வெளிப்படும் கருத்தை விளக்குக (02 புள்ளிகள்)

**ii.** மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் மனிதவள முகாமையாளர்; மனிதவள திட்டமிடல் செயன்முறையின் முதல் இரண்டு படிமுறைகளின் ஊடாக பின்வரும் தகவல்களை கண்டறிந்துள்ளார்.

| பதவி | மனிதவளத் தேவை | மனிதவள வழங்கல் |
|---|---|---|
| உதவிக் கணக்காளர் | 9 | 10 |
| தரக் கட்டுப்பாட்டாளர் | 8 | 4 |

(அ) மனிதவள திட்டமிடல் செயன்முறையின் அடுத்து வரும் படிமுறைகளை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பதவியிலும் நிலவும் சூழ்நிலைகளை விளக்கி, அதற்காக மனிதவள முகாமையாளர் எடுக்கக்கூடிய தீர்மானங்களை முன்வைக்க. (02 புள்ளிகள்)

**iii.** (அ) ஒரு நிறுவனம் தனக்குத் தேவையான ஊழியர்களை நிறுவனத்தின்பால் ஈர்ப்பதற்கு பயன்படுத்தும் உள்ளக ஆட்சேர்ப்பு முறைகள் நான்கினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உள்ளக ஆட்சேர்ப்பு முறைகளின் இரண்டு நன்மைகளையும் இரண்டு குறைபாடுகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**iv.** (அ) ஊழியர் மணக்குறைகள் என்பதால் கருதப்படுவது யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) ஊழியர் மனக் குறைகளைத் தீர்க்கும் மூன்று முறைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

**v.** பின்வருவனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(அ) S&P இலங்கை 20 அனைத்து பங்கு விலைச்சுட்டி (02 புள்ளிகள்)

(ஆ) வங்கிகளுக்கிடையிலான அழைப்பு கடன் சந்தை (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**8)**

**i.** (அ) வணிக நடவடிக்கைகளை இலகுப்படுத்துவதற்காக தகவல் முறைமைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு வணிகத்திற்கு தகவல் முறைமை முக்கியத்துவம் பெறும் விதத்தை நான்கு விடயங்களின் ஊடாக குறிப்பிடுக (02 புள்ளிகள்)

(ஆ) தகவல்களை அதன் தன்மையின் அடிப்படையில் அளவுசார் தகவல் மற்றும் பண்புசார் தகவல் என வகைப்படுத்துகின்றனர். இவ்விரண்டையும் சுருக்கமாக விளக்கி, ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் வீதம் வழங்குக. (02 புள்ளிகள்)

**ii.** (அ) ஒரு நல்ல தகவல் கொண்டிருக்க வேண்டிய நான்கு பண்புகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பயன்பாட்டின் அடிப்படையில் தகவல் முறைமைகளை வகைப்படுத்தும் போது அதில் முகாமைத்துவ தகவல் முறைமை மிக முக்கியமான ஒரு வகையாக காணப்படுகின்றது . முகாமைத்துவ தகவல் முறைமையை விளக்கி, அதன் இரண்டு அடிப்படை பண்புகளை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**iii.** (அ) வணிக நிறுவனங்கள் தங்களது தகவல் முறைமைகளைப் பாதுகாப்பதற்காக Firewall (ஃபயர்வால்) பயன்படுத்துகின்றன. ஃபயர்வால் என்றால் என்ன என்பதை விளக்கி, ஒரு நிறுவனத்திற்கு அது ஏன் அவசியம் என்பதற்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) Blockchain (ப்ளொக்செயின்) தொழில்நுட்பம் தற்போது பல துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. ப்ளொக்செயின் தொழில்நுட்பத்தின் நான்கு நன்மைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**iv.** (அ) ஒரு வணிகத் திட்டத்தை தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு அம்சங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஒரு சந்தைப்படுத்தல் திட்டத்தின் போட்டியாளர் பகுப்பாய்வில் இடம்பெற வேண்டிய நான்கு தகவல்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**v.** ஒரு நிதித் திட்டத்தில் இடம்பெறும் மதிப்பிடப்பட்ட செயற்றிட்டக் கிரயம் என்றால் என்பதனை விளக்கி, அதில் அடங்கும் இரண்டு கூறுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)